(ஈ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2001-2002 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

1. அறிவிப்புகள் — தொடர்ச்சி

(ஆ) குழுக்களுக்குத் தேர்தல்—கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி, தேர்தல் நடத்துவதற்கு, பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள், வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை முதன்மைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்

2001 மே 30] [பேரவைத் தலைவர்]

கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2001 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கோவை நகரில் 'அன்னை சந்தியா சிறுவர் உலகம்' நிறுவப்படுவது குறித்தும்;

2. கோவையில் ஓர் கோளரங்கு நிறுவுவது குறித்தும்;

3. அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

4. பாண்டியாறு-புன்னம்புழா மற்றும் அச்சன்கோவில்-பம்பா-வைப்பார் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும்;

5. தமிழ்நாட்டில் இயங்கிவரும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான ஒரு பல்கலைக்கழகச் சட்டத்தைக் கொண்டுவருவது குறித்தும்;

6. தமிழ்நாட்டில் மைய அரசின் உதவியுடன் ஒரு மாதிரி பல்கலைக்கழகத்தை உருவாக்குவது குறித்தும்;

7. சுயநிதிக் கல்லூரிகள் பெருமளவில் தொடங்கப்பட்டுள்ளதால், அவற்றிற்கென்று தனியாக 'தனியார் சுயநிதிக் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டம்' கொண்டு வருவது குறித்தும்;

8. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சீர்மிகு பள்ளி தொடங்குவது குறித்தும்;

TRUTH ALONE TRIUMPHS